# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.2/2023

PW1– ராஜேந்திரன்                                        நாள்.21.01.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வா.சா.ஆ.10 ரசீதில் கண்ட சொத்தின் சர்வே எண் எனக்கு சரியாக ஞாபகமில்லை. மேற்படி ரசீதுகள் பிரதிவாதிகள் பவுனாம்பாள், சுப்புலட்சுமி, சரவணன், பெரியம்மாள் கிரயம் எழுதிகொடுத்த சொத்துக்களுக்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிகள் கிரயம் கொடுத்த சொத்தில் 1, 6, 9 பிரதிவாதிகள் 2015ம் ஆண்டில் கிரயம் பெற்ற பின்னர் வீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது பொதுபணத்தில் கட்டப்பட்டதாகும். இதுசம்மந்தமாக நான்அப்போதே காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். மேற்படி வீடு 1, 6, 9 பிரதிவாதிகளின் தனிப்பட்ட பணத்தை வைத்து கட்டப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 மின்கட்டண ரசீதுகள் 1, 6, 9 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய சொத்துக்களுக்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 புகாரின் அடிப்படையில் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை. வா.சா.ஆ.13 புகாரை நான் கொடுத்தற்கு ரசீதோ அல்லது வேறு ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் முதலமைச்சரின் தனிப்பிரிவில் இருந்து தபால் வந்தது. அந்த தபாலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.13 புகாரை நான் கொடுக்கவில்லை என்றும், அது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 09.11.2015ம் தேதியிட்ட பத்திரம் வா.சா.ஆ.15 ஆக தாக்கல் செய்துள்ளேன். சரவணன் முன்பு வழக்கில் சம்மந்தப்பட்ட என்அப்பா பெயரில் இருந்த வீட்டில் குடியிருந்தார். 2015ம் ஆண்டிற்கு பிறகு சரவணன் வா.சா.ஆ.15 ஆவணத்தில் கண்ட சொத்தில் குடியிருக்கவில்லை. சாட்சி தற்போது வா.சா.ஆ.15ல் கண்ட சொத்திலும் மற்றும் பட்டறையிலும் குடியிருந்து வந்ததாக கூறுகிறார். 2015ம் ஆண்டிற்கு பின்னர் 1ம் பிரதிவாதி வீடுகட்டிய பின்னர் அதில் சரவணன் குடியிருந்தார். 2015ம் ஆண்டிற்கு பின்னர் சரவணன்

வா.சா.ஆ.15ல் கண்ட சொத்தில் குடியிருக்கவில்லை என்றும் அதில் கண்டுள்ள குடும்ப அட்டை மேற்படி சொத்து சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. என்அம்மா இறப்பதற்கு முன்பு எவ்வளவு நாட்களுக்கு முன்பு என்வீட்டிற்கு அழைத்துசென்றேன் என்றால் சுமார் 9 மாதங்களுக்கு முன்பு அழைத்து சென்றேன். அப்போது என்அம்மாவின் கால் உடைந்திருந்தது. அவரை வண்டியில் கால்உடைந்திருப்பதால் தூக்கிகொண்டுபோனேனா என்றால் நான் தூக்கிகொண்டு போகவில்லை. என்அக்கா அழைத்து வந்தார். அந்த 9 மாதங்களுக்கு முன்பு வரை என்அம்மா ராமச்சந்திரனுடன் குடியிருந்து வந்தார் என்றும், அவர் தான் அவரை உணவளித்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என்அப்பா வீட்டில் இருந்தார். என்அப்பா 1990ம் ஆண்டில் இறந்தார். என்அப்பா இறந்தபின்னர் அவர் இறப்பதற்கு 9 மாதங்களுக்கு முன்புவரை எங்கிருந்தார் என்றால் என்னுடைய வீட்டில் வா.சா.ஆ.16 ஆதார் அட்டையில் கண்ட பொது வீட்டில் குடியிருந்தார். வா.சா.ஆ.16ல் கண்ட வீட்டில் நான் குடியிருந்தேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு 20 வீடுகள் இருக்கும், எல்லா வீட்டிலும் குடியிருக்க முடியுமா.

**வாதிதரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.